# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

அசல் மனு எண்: 0042 / 2016/ ந
ஆணை எண்: 0179 / 2016
நாள்: 03 /12 /2016

திரு. S. ஆத்மநாதன்,
334/8, வேலாயுதம்பிள்ளை நகர்,
கங்காதரபுரம், அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம். 614 616. — மனுதாரர்

நகராட்சி ஆணையர்
அறந்தாங்கி நகராட்சி மற்றும் இருவர் — எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரரது 22.01.16 நாளிட்ட முறையீட்டு மனு 27.01.16 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண் 0042/16 ஆகப் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் அறந்தாங்கி நகர எல்லைக்குள் கிரையம் பெற்ற சொத்தை பட்டா மாற்றம் செய்யக்கோரி அறந்தாங்கி வட்டாட்சியருக்கு, நகராட்சி ஆணையர் மூலமாக 11.11.15ல் விண்ணப்பித்ததாகவும், அறந்தாங்கி நகர நில அளவர் திரு. சௌந்தரராஜன் என்பவர் கையூட்டு கோரியதாகவும், நகராட்சி ஆணையர் அவர்களிடமிருந்து அறந்தாங்கி வட்டாட்சியரிடம் மனு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டதாகவும் நகர நில அளவர் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து நகராட்சி அலுவலக மேலாளரை நேரில் சந்தித்து கேட்டபோது தன்னை நிந்திக்கும்வகையில் பேசி ஆத்திரமூட்டியதாகவும், மன உளைச்சல் ஏற்படுத்தியதாகவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையரை அணுகியபோது வட்டாட்சியருக்கு மீள மனு செய்து பரிகாரம் காண்பதே சரி எனத் தெரிவித்ததாகவும் அன்றே 23.11.15நாளிட்ட நகராட்சிக் கடிதம் 24.11.15ல் தனக்கு கிடைத்ததாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து நிலங்கள் குறித்த ஆவணங்களான சிட்டா, அடங்கல், புலப்படம் ஆகியவை நகராட்சியால் தான் பராமரிக்கப்படுகிறதெனவும் சிட்டா, அடங்கல், புலப்படம் ஆகியவற்றின் நகல்கள் கோரும் நபர்களால் அதற்கான கட்டணம் நகராட்சி அலுவலகத்தில் செலுத்தப்படுகிறதெனவும் ஆனால், மாநிலம் முழுவதும் பெரும்பாலான நகராட்சிகளில் பட்டா மாறுதல் செய்யும் அதிகாரத்தை நகராட்சி ஆணையரிடமிருந்தும், பட்டா மாறுதல் மேல் முறையீட்டு அதிகாரத்தை மண்டல நகராட்சி இயக்குநரிடமிருந்தும், வருவாய்த் துறையினர் கடந்த சில ஆண்டுகளாக அபகரிப்பு செய்துள்ளார்கள் எனவும் இது குறித்து விசாரணை செய்து தக்க உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு அறந்தாங்கி நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (மனு எண் 42/16.நாள் 9.2.16)அனுப்பப்பட்டது. அதன்படி அறந்தாங்கி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க. எண்.10203/15/எப்.1 நாள். 22.03.16 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்ட விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

> *"அறந்தாங்கி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி B பிளாக் 1 நகரப் புல எண். 2/11 உள்ள இடத்திற்கு திரு. என். ஆத்மநாதன் என்பவர் பட்டா மாறுதல் செய்ய ஆணையர் வழி முறை என வட்டாட்சியருக்கு மனு செய்துள்ளார். மேற்படி பட்டா மாறுதல் ஆவண பதிவேடு வட்டாட்சியர் நில அளவை அலுவலகம் அறந்தாங்கி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் நகராட்சி நில அளவை பதிவேட்டில் சிட்டா, அடங்கல், வரைபடம் போன்றவை வட்டாட்சியர் அலுவலக நில அளவைப் பணியாளர்கள் மூலம் இரவல் பணிகள் மட்டுமே ஆணையர் அறந்தாங்கி நகராட்சி மூலம் நடைபெற்று வருகிறது. புகார் மனுவிற்கு 17.11.15 நாளிட்ட நகராட்சி அறிவிப்புக் கடிதம் மூலம் உரிய பதில் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவில் தெரிவித்துள்ள நகரசார் ஆய்வர் திரு. சௌந்தரராஜன் என்பவர் பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளார். மேலும் மனுதாரர் தனது பட்டா மாறுதல் மனுவில் இணைத்துள்ள ஆவணங்களை நகர ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டதில் மனுதாரரின் மனு பட்டா மாறுதலுக்கு உட்பட்ட மனு என்பதால் உரிய முறையாக வட்டாட்சியருக்கு மனு செய்து பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுக் கொள்ள மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது."*

09.05.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை (அசல் மனு எண்: 0042/16 நாள் 31.03.16) அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை வலியுறுத்தியதோடு தனது புகாருக்கு ஆதாரமாக திரு. மாரிமுத்து என்பவருக்குப் பெயர் மாற்றம் செய்து தனிப்பட்டா மாறுதல் செய்தும் நகராட்சியால் வழங்கப்பட்ட செயல்முறைகள் ந.க.2002/2007/எப்.1 நாள்.19.04.2007ன் நகலினைத் தாக்கல் செய்தார். இந்தச் செயல் முறைகள் அளிக்கப்பட்டமை மற்றும் மனுதாரர் கோரிக்கை மறுக்கப்படுதல் தொடர்பான பதிலறிக்கைத் தாக்கல் செய்ய வலியுறுத்தி நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (எண்.0042/16/ந நாள்.18.05.16)அனுப்பப்பட்டது. இதனிடையே பட்டா மாறுதல்கள் தொடர்பான வழிகாட்டுதல்கள் அடங்கிய அரசாணை எண்.117 வருவாய் நாள்.09.03.1999 பரிசீலிக்கப்பட்டது. இவ்வரசாணையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி பட்டா மாறுதல் தொடர்பான பொருட்பாடுகள் வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ளது உறுதி செய்யப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண் 10203/15/எப்.1 நாள் 23.06.16ல் அறந்தாங்கி வட்டாட்சியரிடமிருந்து விவரங்கள் பெற்று அனுப்பிவைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண் 10203/15/எப்.1 நாள் 01.08.16ல் பட்டா மாறுதல் ஆவண பதிவேடு 2013ம் ஆண்டு முதல் வட்டாட்சியர் நில அளவை அலுவலகம், அறந்தாங்கி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறதெனவும் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி நில அளவையில் சிட்டா, அடங்கல், வரைபடம் ஆகிய பணிகள் மட்டும் நகராட்சி வழியாக நடைபெற்று வருகிறதெனவும் மேற்படி பட்டா மாறுதல் தொடர்பாக வட்டாட்சியரிடம் விபரம் பெற்று அனுப்பிவைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர் குறிப்பிட்ட செயல்முறைகளின் மீது கோரப்பட்ட கூடுதல் விவரங்கள் வரப்பெறாததால் தொடர்புடைய ஆவணங்களுடன் 27.09.16 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அறந்தாங்கி நகராட்சி ஆணையருக்கு அழைப்பாணை (அ.ம.எண்.0042/16 நாள். 31.08.16) அனுப்பப்பட்டது. அதன்பின்னர் நடைபெறவிருந்த சாதாரண உள்ளாட்சித் தேர்தல்களைக் கருதி மேற்படி விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு அறிவிப்பாணை (அ.ம.எண். 0042/16/ந நாள். 16.09.2016) வெளியிடப்பட்டது. மேற்படி ஒத்தி வைக்கப்பட்ட விசாரணை 17.11.16 அன்று நிர்ணயிக்கப்பட்டு நகராட்சி ஆணையருக்கு உரிய அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டது.

அறந்தாங்கி நகராட்சி ஆணையரது அறிக்கை (ந.க.எண்.10203/15/எப்.1. நாள். 21.10.16) 27.10.16 அன்று வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

*"சங்கிலி அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள் நடைமுறை நூல் பகுதி II விதி 8 (ஆ) ன் கீழ் இந்நகராட்சி ஆணையரால் பட்டா மாறுதல், பெயர் மாற்றம் செய்யப்பட்டுவந்தன. இதன் அடிப்படையிலேயே ந.க.எண்.2002/2007/எப்.1 நாள். 19.04.2007ன்படி திரு. மாரிமுத்து அவர்களுக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது.*

*மேற்படி பட்டா மாறுதல் / பெயர் மாற்றம் உட்பட்ட அனைத்து பணிகளும் நகரசார் அளவையர் இந்நகராட்சியில் அயற்பணியில் ஈடுபட்டு வருவதாலும், கிராமப்புறப் பகுதிகளில் நிலப் பட்டா மாறுதல், பெயர் மாற்றம், உட்பிரிவு என அனைத்துப் பணிகளும் வட்டாட்சியர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், Chain Survey and Land Records Manual Part II ன் பக்க எண்.95 part VIII படி 2013ஆம் ஆண்டு முதல் அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பட்டா மாறுதல் தொடர்பான அனைத்துப் பணிகளும் அறந்தாங்கி வட்டாட்சியர் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."*

தற்சமயம் அறந்தாங்கி நகராட்சி உட்பட பல்வேறு நகராட்சிகளிலும் பட்டா மாறுதல் / உட்பிரிவு / பெயர் மாற்றுதல் உட்பட எந்தவித பணிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. சிட்டா, அடங்கல், புலப்படம் (FMB) போன்றவற்றின் உண்மை நகல் வழங்கும் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தற்போது மனுதாரர் கோரிய பட்டா மாறுதல் அறந்தாங்கி வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் ப.மா.பி.டி.ஆர் 465/2016 நாள்.11.07.16 மூலம் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது."

மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் நகல்களும் இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

17.11.2016 அன்று அறந்தாங்கி நகராட்சி ஆணையர் நேரில் ஆஜராகி மேற்கண்ட விவரங்களடங்கிய தனது வாக்குமூலத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளின் போது அறந்தாங்கி நகராட்சியில் மேலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள திரு. என். ராஜேந்திரன் என்பவரும் நேரில் ஆஜராகி மனுதாரர் நகராட்சி அலுவலகம் வந்து தனது பட்டா மாறுதல் குறித்து விவரம் கோரிய போது பட்டா மாறுதல் செய்தல் குறித்தான பணி வட்டாட்சியரிடம் உள்ளது, அங்கு தான் மனு கொடுக்க வேண்டும் எனவும் மனுதாரர் முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் இது தெரிந்திருக்குமே எனக் கேட்டதாகவும், மற்றபடி வேறு எந்த வார்த்தையும் சொல்லவில்லை என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும், வட்டாட்சியருக்கு மனு செய்து பட்டா மாறுதல் பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரருக்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

மனுதாரருக்கு தற்போது பட்டா மாறுதல், சம்பந்தப்பட்ட துறையான வருவாய்த் துறையினால் வழங்கப்பட்ட நிலையிலும், மேற்குறிப்பிட்ட ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டு மேல் நடவடிக்கை அவசியமில்லை என முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/12/2016

செயலாளர்

20.12.16

21/12/16

பெறுநர்

1. திரு.S. ஆதம்நாதன்,
   334/B,வேலாயுதம் பிள்ளை நகர்,
   கங்காதரபுரம், அறந்தாங்கி,
   புதுக்கோட்டை மாவட்டம் 614 616.

2. நகராட்சி ஆணையர்,
   அறந்தாங்கி நகராட்சி,
   புதுக்கோட்டை மாவட்டம். 614 616.